A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi



# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
**Email :tneochennai@gmail.com Website : www.tnerc.gov.in**


**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 62 / 2020**

**BY RPAD**

திருமதி. S. சாந்தி,
க/பெ. D.சீனிவாசன்,
14/316, இராமலிங்க நகர்,
பிள்ளாநல்லூர்,
குருசாமிபாளையம் அஞ்சல்,
இராசிபுரம் – 637403.

...மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு. D. ஸ்ரீனிவாசன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காமராஜ் நகர் காலனி,
உடையாப்பட்டி, சேலம் – 14.

...எதிர்மனுதாரர்
(திருமதி K.C. சுந்தரி செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்)

**கேட்புரை நாள்: 21–01–2021**

**ஆணை நாள் : 22–03–2021**

27.11.2020 அன்று பெறப்பட்ட திருமதி. S. சாந்தி, க/பெ. D.சீனிவாசன், 14/316, இராமலிங்க நகர், பிள்ளாநல்லூர், குருசாமிபாளையம் அஞ்சல், இராசிபுரம் – 637403 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 62/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.01.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மனை எண் 21–ல் திரு.ரஙகன் என்பவரின் விண்ணபத்தின் பேரில் கொடுக்கப்பட்டுள்ள ஆறு மின் இணைப்புகளையும் துண்டிக்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மனை எண் 21–ல் திரு.ரஙகன் என்பவர் விண்ணப்பித்ததின் பேரில் மின் வாரியம் மின் இணைப்பு வழஙகியதாகவும் தனக்கு சொந்தமான மனை எண் 20–ஐ காலியாக வைத்துக் கொண்டு மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மனையில் பெற்ற ஆறு மின் இணைப்புகளையும் துண்டிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 பிரிவு அலுவலர் அவருடைய கோரிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் மேல்முறையீட்டாளர் சேலம் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.02.202 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சேலம் மின் பகிர்மான வட்டம் 07.10.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

சேலம் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 07.10.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"<u>மன்றத்தின் முடிவு</u>*
>
> *மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு எண் **433–003–1294, 1295, 1296, 1297, 1298** மற்றும் **1303** அனைத்தும் திரு.N.ரஙகன் என்பவர் பெயரில் வழஙகப்பட்டுள்ளது. மேலும் இம்மின் இணைப்பானது மாநகராட்சியில் இருந்து பெறப்பட்ட கதவு இலக்க எண் குறிப்பிட்ட வீட்டு வரி ரசீது அடிப்படையில் மின் இணைப்புகள் வழஙகப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட மின் இணைப்புகள் அனைத்தும் மின் கட்டணம் முறையாக செலுத்தப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது என வாரிய தரப்பு வாதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே Memo.No. 04853/CED/ED/AEE.GEN/F.Misc/PR 0240-*

*1/17, Dt. 25.04.2017 மற்றும் Memo.No. CE/Comml/EE3/AEE2/F.Sc objection/D.855/ 2015, Dt. 28.10.2015 –ன் உத்தரவுப்படி மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்புகளை துண்டிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க இயலாது என்றும் தமிழ்நாடு மின்சார வழஙகல் விதித் தொகுப்பு 2004–ல், Chapter-3, 21 பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மின் நுகர்வோர் மின் கட்டணம் முறையாக செலுத்தி வரும் நிலையில் மேற்கண்ட மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்ய இயலாது என்றும் இம்மன்றத்தில் தீர்ப்பு வழஙகப்படுகிறது.''*

**4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.01.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. D. ஸ்ரீனிவாசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர் திருமதி K.C. சுந்தரி செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம், சேலம் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதஙகளை எடுத்துரைத்தார்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதஙகள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. குறைதீர்மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர்மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணஙகள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட வாதஙகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

**5.0 மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:**

**5.1** மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான மனை எண் 21 என்றும், திரு.ரஙகன் என்பவர் அவருக்கு சொந்தமான மனை எண் 20–ஐ காலியாக வைத்துவிட்டு மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மணை எண் 21–ல் விண்ணப்பித்து மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும் இது சட்ட விரோதமானது என்றும் தெரிவித்துள்ளார்.

5.2 திரு. ரஙகன் என்பவர் சமர்ப்பித்துள்ள மின் இணைப்பு மனு அவருக்கு சொந்தமான மனை எண்–20 ற்கான மின் இணைப்பு மனு ஆகும். ஆனால் சட்ட விரோதமாக மனை எண் 21–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 திரு.ரஙகன் என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புகள் அவர் விண்ணப்பித்துள்ள மனை எண் 20–ல் கொடுக்கப்பட்டதா என்பதை கள ஆய்வு செய்து மனையில் உரிமையில்லாத திரு.ரஙகன் அவர்களின் விண்ணபத்தின் பேரில் மனை எண் 21–ல் சட்ட விரோதமாக வழஙகப்பட்டுள்ள ஆறு மின் இணைப்புகளை துண்டிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.4 திரு.ரஙகன் அவர்கள் மனை எண் 21–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடமானது அவருடைய மனை எண் 20ற்கு வாஙகியுள்ள கட்டிட அனுமதி எண் 12/179/2015–ஐ கொண்டு கட்டப்பட்டது என்றும், எனவே மனை எண் 21–ல் கட்டியுள்ள கட்டிடமானது அனுமதி பெறாத கட்டிடம் என்று சேலம் மாநகராட்சி ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்டு அந்த கட்டிடத்தினை இடிக்குமாறு திரு.ரஙகன் அவர்களுக்கு ஆணை வழஙகப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரர்களின் பதிலுரை:</u>**

6.1 திரு.ரஙகன், த/பெ. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு சொந்தமான மனை எண் 20–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடஙகளுக்கு சேலம் மாநகராட்சி மூலம் வழஙகப்பட்ட உரிய வீட்டு வரி ரசீதுகளுடன் விண்ணப்பம் அளித்ததின் பேரில் கள ஆய்வு செய்யப்பட்டு மின் இணைப்பு எண்கள் 433–003–1294 நாள் 08.01.2018, 433–003–1295 நாள் 12.01.2018, 433–003–1296 நாள் 12.01.2018, 433–003–1297 நாள் 19.01.2018, 433–003–1298 நாள் 19.01.2018 மற்றும் 433–003–1303 நாள் 02.02.2018 வழஙகப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திருமதி S. சாந்தி, க/பெ. சீனிவாசன் அவர்களிடமிருந்து 25.11.2019 தேதியிட்டு பெறப்பட்ட புகார் மனுவில் மனை எண் 20–க்கு பதிலாக 21–ல் தவறுதலாக வீடு மாற்றிக் கட்டி முறைகேடாக மின் இணைப்புகள் திரு.ரஙகன் அவர்கள் பெற்றுள்ளார் என்று தெரிவித்ததன் அடிப்படையில் மேற்படி சர்சைக்குரிய இடம் உதவி பொறியாளர்/இ&ப/அம்மாபேட்டை அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு 03.01.2020 மற்றும் 11.02.2020 தேதியிட்ட உதவி

பொறியாளர் / இ&ப /அம்மாபேட்டை அலுவலக கடிதம் வாயிலாக வீடு கட்டப்பட்டுள்ள இடத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி திரு.ரஙகன் அவர்களிடம் கேட்கப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். அதற்கு திரு.ரஙகன் அவர்களின் வழக்கறிஞர் மூலமாக பெறப்பட்ட கடிதத்தில் மேற்படி நிலம் தன்னுடைய நிலம் என்றும், திருமதி S. சாந்தி, க/பெ. சீனிவாசன் என்பவருக்கு உண்மையில் பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தால் நீதிமன்றத்தை நாடி அதன் வாயிலாக தீர்வு காணவேண்டும் என்றும், நீதிமன்ற தீர்ப்பு எதிராக வரும்பட்சத்தில் மின் துண்டிப்பு செய்யலாம் என்றும், உரிய ஆவணங்கள் அடிப்படையில் மின் இணைப்பு பெற்று அதற்கான உரிய கட்டணங்கள் அனைத்தையும் இதுநாள்வரை செலுத்தி வருவதாகவும், எனவே மேற்படி மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்யப்படக்கூடாது என்றும் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.3** தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய விதி எண் **27(3)–**ன் படி, தாழ்வழுத்த மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்ப படிவம் **(i)–**ல் உள்ள படி விற்பனை ஒப்பாவணம், பிரிவினை ஒப்பாவணம், ஒதுக்கீடு கடிதம், கணினி பட்டா, வருவாய்த்துறை அலுவலர்களால் வழஙகப்பட்ட உடைமை சான்றிதழ்கள், நீதி மன்றத் தீர்ப்புரை அல்லது அண்மையிலான சொத்து வரி பற்று சீட்டு இதில் ஏதாவது ஒன்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின் இணைப்பு வழஙகப்படும். திரு.ரஙகன், த/பெ. நாராயணசாமி நாயுடு என்பவர் வீட்டு வரி இரசீது சமர்ப்பித்ததின் அடிப்படையில் கள ஆய்வு செய்து மின் இணைப்புகள் வழஙகப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**6.4** தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய Supply code chapter(3), 21 section 56-ன் படி மின் இணைப்புகளை கீழ்கண்ட காரணஙகளுக்கு மட்டுமே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் மின் துண்டிப்பு செய்ய இயலும்.

(i) மின் கட்டண தொகை செலுத்தப்படாத மின் இணைப்புகள்

(ii) மின் திருட்டு கண்டறியப்பட்ட மின் இணைப்புகள்

(iii) மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் மின் துண்டிப்பு செய்ய கோரிய மின் இணைப்புகள்.

மேலும், மேற்கண்ட மின் இணைப்புகள் குடியிருப்பு பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே மின் துண்டிப்பு செய்யப்படவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி சாந்தி அவர்கள் தனக்கு சொந்தமான மனை எண் 21 எனவும், திரு. ரஙகன் என்பவர் அவருடைய மனை எண் 20–க்கு கட்டிட அனுமதி பெற்று ஆனால் தன்னுடைய மனை எண் 21–ல் சட்டவிரோதமாக கட்டிடம் கட்டி 6 மின் இணைப்புகள் பெற்றுள்ளார் எனவும், மனை எண் 21–ல் கட்டியுள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சியின் அனுமதி இல்லையாதலால் அந்த கட்டிடத்தை இடிக்குமாறு திரு.ரஙகன் அவர்களுக்கு மாநகராட்சி ஆணையிட்டுள்ளதாக தெரிவித்து ஆறு மின் இணைப்புகளையும் துண்டிக்குமாறு வேண்டுகிறார்.

7.3 திரு. ரஙகன் அவர்கள் மனை எண் 20–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு சேலம் நகராட்சி வழஙகிய வீட்டு வரி ரசீதுகளுடன் விண்ணப்பம் அளித்ததின் பேரில் கள ஆய்வு செய்து 1/2018 மற்றும் 2/2018 மாதஙகளில் ஆறு புதிய மின் இணைப்புகள் வழஙகப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். திருமதி சாந்தி அவர்கள் தன்னுடைய மனை எண் 21–ல் திரு. ரஙகன் முறைகேடாக கட்டிடம் கட்டி மின் இணைப்புகள் பெற்றுள்ளதாக மனு அளித்ததின்பேரில் எதிர்மனுதாரர் கள ஆய்வு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ள மனைக்குரிய வருவாய் துறை ஆவணஙகளை சமர்ப்பிக்குமாறு கடிதம் வாயிலாக தெரிவித்ததாகவும், திரு.ரஙகன் அவர்கள் மேற்படி நிலம் தன்னுடையது என்றும், உரிய ஆவணஙகள் சமர்ப்பித்து மின் இணைப்புகள் பெற்றுள்ளதாகவும், மின் உபயோக கட்டணஙகளை தவறாமல் செலுத்தி வருவதாகவும், ஆகையால் மின் இணைப்புகளை துண்டிப்பு செய்யக்கூடாது என தன்னுடைய வழக்கறிஞர் மூலமாக அறிவிக்கை கொடுத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய விதி எண் 27(3)–ன்படி விண்ணப்ப படிவம் மற்றும் வீட்டு வரி ரசீது பெற்று மின் இணைப்பு வழஙகப்பட்டுள்ளது எனவும், தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய மின் வழஙகல் விதி 21–ன்படி (i) மின் உபயோக கட்டணம் செலுத்தாதிருந்தால் (ii) மின் திருட்டு கண்டறியப்பட்டால் (iii) மாசு கட்டுப்பாட்டு வாரிய அறிவுறுத்தல் ஆகிய ஏதேனும் ஒரு காரணத்தால் மட்டுமே மின் இணைப்புகளை துண்டிப்பு செய்ய இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி மனை எண் 21–ல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்புகள் 2/2018–ல் பெற்ற பிறகு சுமார் 9 மாதங்கள் கழித்து தன்னுடைய மனையில் முறைகேடாக கட்டிடம் கட்டி மின் இணைப்புகள் பெற்றிருப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். அதாவது, 21–ம் மனையில் கட்டுமான பணிகள் ஆரம்பித்து முடிக்கப்படும் வரையிலும், மின் இணைப்புகள் பெற்று 9 மாதங்கள் வரையிலும் (சுமார் இரண்டு வருடஙகள்) தன்னுடைய மனையில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது மேல்முறையீட்டாளருக்கு தெரியவில்லையென்பது வருத்தமளிக்கிறது. மேலும், மின் இணைப்புகள் வழங்குவதற்கு முன்பே மனையின் உரிமையாளர் மேல்முறையீட்டாளர்தான் என்பதற்கு உரிய ஆவணங்கள் அளித்து ஆட்சேபணை தெரிவித்திருக்கலாம்.

7.6 மேலும், மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மனை எண் 21–ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் சேலம் மாநகராட்சியின் திட்ட அனுமதி/ கட்டுமான அனுமதி பெறாத கட்டிடம் என மாநகராட்சி ஆணையரால் தீர்மாணிக்கப்பட்டு கட்டிடத்தை இடிக்குமாறு திரு.ரஙகன் அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தகுந்த சட்ட வழிமுறைகளின்படி மாநகராட்சி ஆணையை நிறைவேற்றுவற்கு உரிய நடவடிக்கையை மேல்முறையீட்டாளர் மேற்கொள்ளுதல் நடைமுறை சாத்தியமாகும்.

7.7 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்பு கோரும் மின்னிணைப்புகள் தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய மின்பகிர்மான விதி 27(3)ன்படி கொடுக்கப்பட்டிருப்பதாலும், மின் இணைப்புகளின் உரிமையாளர்/அல்லது மின் உபயோகிப்பாளர் தவறாமல் மின் கட்டணம் செலுத்திவருவதாலும், தமிழ்நாடு மின் வழஙகல் விதி 21–ன்படி திரு.ரஙகன் அவர்கள் உபயோகத்தில் உள்ள மின் இணைப்புகளை மின் துண்டிப்பு செய்ய இயலாதென்கின்ற எதிர்மனுதாரின் வாதம் எனக்கு ஏற்புடையது என கருதுகிறேன். எனவே, திரு.ரஙகன் அவர்களுக்கு வழஙகப்பட்டுள்ள மின் இணைப்புகள் 433–003–1294, 433–003–1295, 433–003–1296, 433–003–1297, 433–003–1298 மற்றும் 433–003–1303 ஆகியவற்றை மின் துண்டிப்பு செய்யக்கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.

## 8.0 <u>முடிவுரை:</u>

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி திரு.ரஙகன் அவர்களுக்கு வழஙகப்பட்டுள்ள மின் இணைப்புகள் 433–003–1294, 433–003–1295, 433–003–1296, 433–003–1297, 433–003–1298

மற்றும் 433–003–1303 ஆகியவற்றை துண்டிப்பு செய்யக்கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 62/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>
1. திருமதி. S. சாந்தி,
க/பெ. D.சீனிவாசன்,
14/316, இராமலிங்க நகர்,
பிள்ளாநல்லூர், குருசாமிபாளையம் அஞ்சல்,
இராசிபுரம் – 637403.

2. செயற்பொறியாளர்/இ&ப/கிழக்கு–சேலம்,
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காமராஜ் நகர் காலனி, உடையாப்பட்டி, சேலம் – 14.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
சேலம் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி அஞ்சல், சேலம்– 636 014.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.